[23rd January 1961

SRI G. KRISHNAMOORTHY : Sir, are the Government aware that schools with a strength over a certain limit are not able to provide the necessary amenities like playgrounds, etc.?

THE HON. SRI C. SUBRAMANIAM : That is also taken care of. They are provided for. But these things happen only in crowded cities. However much we may wish, sufficient playgrounds are not available in some schools. This has got to be realised.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speach indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENT *RE* MESSAGE FROM THE ASSEMBLY.

MR. CHAIRMAN : I have to announce to the House that I have received a message, dated the 10th September 1960, from the Hon. Speaker, Madras Legislative Assembly, transmitting a copy of the Madras Cinemas (Regulation) Amendment Bill, 1960 (L.A. Bill No. 32 of 1960), as passed by the Legislative Assembly on the 10th September 1960 and signed by him, for the occurrence of the Council.

III.—DISCUSSION ON THE GOVERNOKS ADDRESS—*cont.*

* SRI A. SUBRAMANYAM : னம் தலைவர் அவர்களே, கவர்னர்
3-10 p.m. பெருமான் நிகழ்த்திய உரையை வரவேற்று அதனை ஆதரித்துச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கவர்னர் பெருமான் நிகழ்த்திய உரை மிகச் சுருக்கமாக இருந்தாலும்கூட, சுருக்கச் சொல்லி விளங்க வைத்தல் என்ற முறையில் பல நல்ல கருத்துக்கள் அடங்கியதாக இருக்கிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது. இந்தத் தருணத்தில், நம்முடைய பாரத தேசத்தையும் உலகத்தில் நான்கில் ஒரு பாகத்தையும் ஒரு காலத்தில் ஏதேச்சாதிகாரமாக ஆண்டு வந்த பிரிட்டிஷ் பாரம்பரையைச் சேர்ந்த எலிசபெத் ராணி பெருமாட்டியார் அவர்கள், சுதந்திரம் அடைந்த இந்தியாவில் வந்திருப்பதானது நமக்குப் பெரும் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. நாம் அனைவரும் அவரை அன்போடு வரவேற்க வேண்டுமென்று கவர்னர் பெருமான் அவர்கள் கூறியது மிகப் பொருத்தமானதே. அடிமையாக இருந்தபொழுது இந்த தேசம் இருந்த ஒரு நிலையையும் இப்பொழுது பத்து பன்னிரண்டு ஆண்டுகளில் இந்த பாரத தேசத்தை நாம் எந்தமுறையில் சீர்திருத்திக்கொண்டு வருகிறோம் என்பதையும், எந்த முறையில் மகாத்மா காந்தியினுடைய கொள்கையை மிக நல்லமுறையில் நடத்தி வருகிறோம் என்பதையும் நேரில் காண வருகிற இந்த சந்தர்ப்பத்தை நாம் மறக்கமுடியாது. ஆகவே இந்த சந்தர்ப்பத்தில் அவர்களுடைய வரவை நாம் மகிழ்ச்சியோடு வரவேற்க வேண்டியதே.